# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 136 | 4 Pages | 19.12.2023 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 136 | 4 பக்கங்கள் | 19.12.2023 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## தென் மாவட்ட மக்களை காப்போம்: முதல்வர் உறுதி

கோவை, டிச.19

பொதுமக்களுக்கு அரசின் சேவைகள்விரைவாககிடைக்கவும், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது விரைந்துதீர்வுகாணவும்தமிழக அரசு மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

இந்த திட்டத்தின் தொடக்க விழா கோவை எஸ்.என்.ஆர். கல்லூரி கலையரங்கத்தில் இன்று நடந்தது. விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து அவர் பேசியதாவது:






★ மழை வெள்ள பாதிப்பில் இருந்து தென் மாவட்ட மக்களை காப்போம்.

★ மீட்பு பணி தொடர்பாக அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசி வருகிறேன்.

★ தென் மாவட்டங்களில் அரசு இயந்திரம் முழுமையாக குவிக்கப்பட்டுள்ளது.

★தற்போதுதென்மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

★ சென்னை அனுபவத்தை வைத்து தென் மாவட்டங்களில் மீட்பு பணி நடைபெற்று வருகிறது.

★ மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ அரசின் சேவைகளை எளிதில் மக்களிடம் கொண்டு செல்வதற்கு மக்களுடன் முதல்வர் திட்டம் உதவியாக இருக்கும்.

★ முகாம் அமைத்து மனுக்கள் பெறப்பட்டு 30 நாட்களில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

★ மக்களுடன் முதல்வர் திட்டம் என்னுடைய நேரடி கண்காணிப்பில் இருக்கும்.

★ மக்கள் அடிக்கடி அணுகும் துறைகளாக 13 துறைகள் கண்டறியப்பட்டு அதன் வாயிலாக தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.

## 50 ஆயிரம் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை


கன்னியாகுமரி, டிச.19


குமரி மாவட்டம் நீண்ட நெடிய கடற்கரை பகுதி கொண்ட மாவட்ட மாகும். கன்னியாகுமரி ஆரோக்கிய புரம் முதல் நீரோடி வரை 72 கிலோ மீட்டர் தூரம் உள்ள கடலோரப் பகுதியில் மொத்தம் 48 கடற்கரை கிராமங்கள் உள்ளன.

இந்த கிராமங்களில் கடந்த 2 நாட் களாக இடைவிடாமல் தொடர்ந்து மழை பெய்தது. இன்று காலை மழை ஓய்ந்த போதிலும் காற்றின் வேகம் அதிகமாக உள்ளது. சூறா வளி காற்று காரணமாக, கடல் பயங் கர கொந்தளிப்பாகவும், சீற்றமாகவும் காணப்படுகிறது. கடல் சீற்றத்தினால் ராட்சத அலை கள் ஆக்ரோஷமாக எழும்பி வீசு கின்றன.

இதைத்தொடர்ந்து கன்னியாகு மரி, சின்ன முட்டம், ஆரோக்கியபு ரம், கோவளம், வாவத்துறை, புதுகி ராமம், சிலுவைநகர், கீழமணக்குடி, மணக்குடி, பள்ளம், ராஜாக்கமங்க லம் துறை என குமரி மாவட்ட கடற் கரை கிராமங்களை சேர்ந்த 50 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இன்று கடலுக்கு மீன் பிடிக்க செல் லவில்லை.

இதனால் ஆயிரக்கணக்கான வள் ளங்கள், கட்டுமரங்கள், நாட்டுப் படகுகள் கடற்கரையில் பாதுகாப் பான மேட்டுப் பகுதியில் வரிசை யாக நிறுத்தி வைக்கப்பட்டு உள் ளன. இதே போல கன்னியாகுமரி





அருகே உள்ள சின்ன முட்டம் மீன் பிடி துறைமுகத்தை தங்குதளமாக கொண்டு மீன்பிடித் தொழிலில் ஈடு பட்டு வரும் 350க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும் இன்று காலை கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வில்லை.

அகஸ்தீஸ்வரம், லீபுரம், கொட் டாரம், சாமிதோப்பு, தென்தாமரை குளம், அஞ்சுகிராமம் உள்பட பல பகுதிகளில் சூறாவளி காற்று வீசி வருகிறது. கனமழையின் காரண மாக பெரும்பாலான குளங்கள் நிரம்பி வழிகின்றன. கன்னியாகுமரி நாகர்கோவில் இடையேயான தேசிய நெடுஞ்சாலையில் கொட்டா ரம் அருகே ரோட்டின் இருபுறமும் குளங்கள் உள்ளன. இதில் ரோட் டின் வட புறம் உள்ள அச்சன்குள மும் அதையொட்டி ஓடும் நாஞ்சில் நாடு புத்தனாறும் நிரம்பி வழிகின் றன. இந்த தண்ணீர் அச்சன்குளம் ஊருக்குள் புகுந்தது. இதனால் அந் தப் பகுதி தீவு போல் காட்சி அளிக் கிறது. அங்குள்ள கிறிஸ்தவ ஆல யம், நூல் நிலையம் மற்றும் வீடுகளை வெள்ளம் சூழ்ந்து நின் றது. அதுமட்டுமின்றி அச்சன்குளம் நிரம்பி கன்னியாகுமரி நாகர்கோ வில் தேசிய நெடுஞ்சாலையில் வெள்ளம் மறுகால் பாய்ந்து ஓடுகி றது.

அதன் அருகில் உள்ள பில்லாகுளத்தில் தண்ணீர் செல்வ தால், சாலை வெளியே தெரியாத அளவுக்கு ஆறு போல் காட்சியளித் தது. இதனால் சாலையில் அரிப்பு ஏற்பட்டது. கொட்டாரம்அச்சங்கு ளம் பகுதியில் பழமையான ராட்சத புளியமரம் வேரோடு சாய்ந்தது. அந் தப் பகுதியில் 3 மின்கம்பங்களும் சாய்ந்து விழுந்தன. இதனால் அந்த பகுதியில் மின் இணைப்பு துண்டிக் கப்பட்டது.

மேலும் கன்னியாகுமரிநாகர்கோ வில் இடையே போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது. கன்னியாகுமரி போலீசார், மின்சார வாரிய ஊழியர் கள் மற்றும் கொட்டாரம் பேரூ ராட்சி நிர்வாகத்தினர் அங்கு விரைந்து சென்று பொதுமக்கள் உத வியுடன் சாலையில் கிடந்த மரம் மற்றும் மின்கம்பங்களை அகற்றும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து 2 மணி நேரத் துக்கு பிறகு அந்த பகுதியில் போக் குவரத்து சீரானது.

தொடர்மழையின்காரணமாககன் னியாகுமரிக்கு சுற்றுலா பயணிக ளின் வருகையும் அடியோடு குறைந்து விட்டது. இதனால் கன்னி யாகுமரி பகுதியில் உள்ள சுற்றுலாத் தலங்கள் வெறிச்சோடி கிடக்கின்றன. இதற்கிடையில் தொடர் மழையின் காரணமாக விவேகானந்தர் மண்டபத்துக்கு இன்று 2வது நாளாக படகு போக்கு வரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது.

## சங்ககிரி பேரூராட்சி விரைவில் நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்: அமைச்சர் கே.என்.நேரு

சேலம், டிச.19

சங்ககிரி பேரூராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ளநவீனஎரிவாயு தகனமேடையை வளாகத்தில்சனிக் கிழமை மரக்கன்றுகளை நட்டு வைக்கிறார் அமைச்சர் கே.என். நேரு.

சேலம் மாவட்டம் சங்ககிரி பேரூ ராட்சி விரைவில் நகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று நகர்ப்புற நிர் வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

சங்ககிரி,எடப்பாடி சாலையில் லஷ்மி தீர்த்தம் அருகே பேரூராட்சி சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் சங்ககிரி, அக்கமாபேட் டையில் மறைந்த திரைப்பட இயக் குநர் ஏ.பி.நாகராஜனின் வம்சாவழி யினர் நடத்தி வரும் முருக சந்திரா எஜூகேசனல் மற்றும் சோசியல் பவுண்டேசன் டிரஸ்ட் தலைவர் சிவா பரமசிவம் தலைமையில், எடப்பாடி ஸ்வலெக்ட் எனர்ஜி சிஸ் டம்ஸ் தலைவர் ஆர்.செல்லப்பன், சங்ககிரி லாரி உரிமையாளர் சங்கம், உள்ளிட்ட பல்வேறு பொதுநல அமைப்புகளும் இணைந்து சுமார் ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடையை அமைத் துள்ளனர். இந்த எரிவாயு தகன



மேடை தொடக்க விழா சனிக்கி ழமை நடைபெற்றது.


இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சி யர் செ.கார்மேகம் தலைமை வகித் தார். சங்ககிரி வருவாய் கோட்டாட் சியர் ந.லோகநாயகி வரவேற்றார். நவீன எரிவாயு தகன மேடை வளா கத்தில் மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்து அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

இங்குள்ள லஷ்சுமி தீர்த்த குளம் அரசு நிதியில் தூர்வாரப்படும். சங்க கிரியில் நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் சாலைகள் செப்பனிடப்பட் டும், புதிய சாலைகள் அமைக்கப் பட்டும் வருகின்றன. சங்ககிரி பேரூ ராட்சி விரைவில் நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

நகராட்சி நிர்வாகத் துறை மூலம் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பொது மக்கள் தங்களுக்கு தேவையான வற்றை செய்து கொள்ள விரும்பினால் திட்ட மதிப்பீட்டில் 33 சதவீதத்தை பொதுமக்கள் செலுத்த வேண்டும். மீதமுள்ள 67 சதவீதத்தை அரசு செலுத்தி அத்திட் டத்தினை நிறைவேற்றும் என்றார்.

இந்த நிகழச்சியில் சேலம் வடக்கு சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். ராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல்மங்கை, முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வ கணபதி, சங்ககிரி ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் பி.தங்க முத்து, வட்டாட்சியர் கே.அறிவு டைநம்பி, சங்ககிரி பேரூராட்சி செயல் அலுவலர் ஜி.உஷா, தம்மம் பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் வ.சுலைமான்சேட், ஊராட்சி ஒன் றிய ஆணையர் முத்துசாமி, பேரூ ராட்சித் தலைவர் மணிமொழிமுரு கன், பேரூராட்சி துணைத் தலைவர் ஆர்.வி.அருண் பிரபு, பேரூராட்சி உறுப்பினர்கள், சங்ககிரி திமுக நகரச் செயலாளர் கே.எம்.முருகன், சங்க கிரி லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கந்தசாமி, செயலாளர் என்.மோகன்குமார், பொருளாளர் எஸ். ஆர். செங்கோட்டு வேல், துணைத் தலைவர் எம்.சின் னதம்பி, இணைச் செயலாளர் கே. முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கணேஷ்ராம் நன்றி கூறினார்.

## அடிமை மனப்பான்மையிலிருந்து இந்தியா விடுதலை பெற்றுவிட்டது: பிரதமர் மோடி



உத்தரப் பிரதேசம், டிச.19

உத்தரப் பிரதேசம் மாநிலம் வாரணாசியில் உலகின் மிகப்பெரிய தியான மையமான ஸ்வர்வேட் மகாமந்திரை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

ஸ்வர்வேட் மகாமந்திர் திறப்பு விழாவைத் தொடர்ந்து, பிரதமர் மோடி உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்துடன் ஒரே நேரத்தில் 20,000 பேர் அமர்ந்து தியானம் செய்யக்கூடிய மையத்தை பார்வையிட்டார். மகாமந்திரத்தின் சுவர்களில் ஸ்வர்வேதத்தின் வசனங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் பேசிய அவர், அடிமை மனநிலையில் இருந்து நாடு விடுதலை பெற்றுள்ளதாகவும், அதன் பாரம்பரியத்தை நினைத்து பெருமைப்படுவதாகவும் கூறினார்.

இதுகுறித்து பிரதமர் மோடி மேலும் பேசியதாவது:

அடிமைத்தன காலத்தில், இந்தியாவை பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட அடக்குமுறையாளர்கள் முதலில் நமது சின்னங்களை குறிவைத்தனர். சுதந்திரத்திற்குப் பிறகு, கலாச்சார சின்னங்களை மீண்டும் உருவாக்குவது அவசியமானது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சோம்நாத் கோவிலை மீண்டும் கட்டுவதற்கு எதிர்ப்பு இருந்தது. பல சதாப்தங்களாக இந்த சிந்தனை ஆதிக்கம் செலுத்தியது. இதன் விளைவாக நாடு தாழ்வு மனப்பான்மையின் குழிக்குள் தள்ளப்பட்டது.

சுதந்திரம் கிடைத்து ஏழு தசாப்தங்களுக்குப் பிறகு, காலச் சக்கரம் மீண்டும் ஒருமுறை சுழன்றது. அடிமை மனப்பான்மையிலிருந்தும், பாரம்பரியத்தைப் பற்றிய பெருமித உணர்விலிருந்தும் நாடு விடுதலையை அறிவித்தது.

சோம்நாத்தில் இருந்து தொடங்கிய பணி தற்போது பிரச்சாரமாக மாறியுள்ளது. விஸ்வநாத்தின் மகத்துவம் இந்தியாவின் பெருமையை பாடி வருகிறது.

பலநூற்றாண்டுகளாக,பொருளாதாரவளம்மற்றும்உடல்வளர்ச்சிக்கு இந்தியா எடுத்துக்காட்டாக விளங்குகிறது. காசி புத்துயிர் பெற அரசு, சமூகம் மற்றும் துறவிகள் இணைந்து பணியாற்றி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## தி.மு.க., காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட்



புதுடெல்லி: டிச.19

பாராளுமன்ற பாதுகாப்பு குறைபாடு தொடர்பாக பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித் ஷா விளக்கம் அளிக்க வலியுறுத்தி பாராளுமன்ற இரு அவைகளிலும் எதிர்கட்சியினர் கடந்த வாரம் அமளியில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து 14 எம்.பி.க்கள் எஞ்சிய கூட்டத் தொடர் முழுவதும் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டனர்.

பாதுகாப்பு குறைபாடு தொடர்பாக அமித்ஷா விளக்கம் அளிக்க கோரியும், 14 எம்.பி.க்கள் மீதான சஸ்பெண்டை திரும்ப பெற வலியுறுத்தியும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் 2 நாட்கள் அவை அலுவல்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

2 தினங்களுக்கு பிறகு பாராளுமன்றம் இன்று கூடியதும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் மீண்டும் அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. 2 மணிக்கு பிறகு அவை கூடியதும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து தி.மு.க. மற்றும் காங்கிரஸ் எம்.பி.க்களை நடப்பு கூட்டத்தொடர்முழுவதும்சஸ்பெண்டு செய்து மக்களவை சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

அவை நடவடிக்கைகளுக்கு இடையூறாக செயல்பட்டதாக தி.மு.க. எம்.பி.க்களான டி.ஆர். பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், அண்ணாதுரை, கலாநிதி வீராச்சாமி, எஸ்.எஸ். பழனி மாணிக்கம், காங்கிரஸ் எம்.பி.க்களான ஆதிரஞ்சன் சௌத்ரி, திருநாவுக்கரசர், விஜய் வசந்த் மற்றும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியை சேர்ந்த நவாஸ்கனி உள்ளிட்டோர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 31 மக்களவை உறுப்பினர்கள் இன்று ஒரே நாளில் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரம் 15பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலையில் மொத்தம் 46பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் இடிந்து விழுந்த வீடு உரிமையாளர் கதறல்

நெல்லை, டிச.19

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நெல்லை, தூத்து க்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்திருந்தது. அதன்படி, நேற்று முன்தினம் இரவு தொடங்கி இந்த மாவட்டங்களில் அனைத்துப் பகுதிகளிலும் கனமழை பெய்ய தொடங்கியது.



இதனால் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நகர பகுதியில் உள்ள சாலைகள், தெருக்கள் முதல் கிராமங்கள் வரை அனைத்து பகுதிகளும் வெள்ளத்தில் மிதக்கின்றன. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், நெல்லை டவுன் பகுதியில் கனமழை வெள்ளத்தால் கான்க்ரீட் வீடு ஒன்று இடிந்து விழுந்தது. இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

அந்த வீடியோவில், வீடு கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து வெள்ளத்தில் விழுகிறது. அப்போது பெண் ஒருவர் எல்லாம் போச்சே என்று கூறி கதறுவது கேட்பாரை கண்கலங்க செய்துள்ளது.

# வெறும் காலுடன் தண்ணீரில் நடக்க வேண்டாம் புதிய வகை தொற்றுக்கள் உருவாகலாம்

சென்னை, டிச.19

பெரு மழையால் ஏற்படும் பெரும் பாதிப்புகளில் இருந்து மீண்டாலும் அதன் பிறகு பல்வேறு வகையான நோய்கள் பரவும்.

குறிப்பாக மழைக்காலத்துக்கு பிறகு வயிற்று போக்கு, மஞ்சள் காமாலை, எலி காய்ச்சல், டைபாய்டு ஆகியவை வழக்கமாக வரும். இந்த நோய்களில் இருந்து தற்காத்துக் கொள்ள விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

தண்ணீர் மட்டுமல்ல மண்ணில் இருந்தும் நோய்கள் பரவும் ஆபத்து உள்ளது. இதுபற்றி டாக்டர் சவுந்தரராஜன் கூறியதாவது:

மழைக் காலங்களில் தண்ணீர் அசுத்தமடைவதால் அதில் இருந்து பரவும் வைரஸ்கள் மனிதர்களையம் தாக்குகிறது. அதனால்தான் மழைக் காலங்களில் எலி காய்ச்சல், மஞ்சள் காமாலை, வயிற்று போக்கு போன்ற உடல் பாதிப்புகள் ஏற்படுகிறது.

இவற்றை தவிர்க்க மழைக் காலங்களில் தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்க வேண்டும்.

தெருக்களில் தேங்கிய தண்ணீர் மட்டும்ல, தண்ணீர் வடிந்த பிறகு மண்ணில் இருந்தும் புதிய வகை தொற்றுக்கள் உருவாகலாம்.

பெருவெள்ள பாதிப்புகளுக்கு பிறகு மீலியாய்டோகிஸ் என்ற பாக்டீரியா தொற்றும் வரலாம். ஆனால் நமது நாட்டில் இது அரிதானது.

பொதுவாக மண்ணில் இருந்து பரவும் இந்த மாதிரி தொற்றுக்கள் கால்கள், உடலில் சிறு காயங்கள் இருந்தாலும் மாசடைந்த தண்ணீரில் பாதுகாப்பு இல்லாமல் நடக்கும் போது தொற்று ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

அதே போல் குடிநீர் மாசுபடுவதாலும் தொற்றுக்கள் ஏற்படும். வயிற்று போக்குக்கு முக்கிய காரணம் இதுவே.

எனவே மழை காலங்களில் மிகுந்த முன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். தண்ணீரை நன்றாக கொதிக்க வைத்து ஆறிய பிறகு குடிக்க வேண்டும்.

சமைக்கும் உணவுகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். வெறும் காலுடன் அழுக்கடைந்த தண்ணீரில் நடப்பதை தவிர்க்க வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள், சர்க்கரை நோயாளிகள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வால்பாறை ரோட்டில் பட்டப்பகலில் உலா வந்த ஒற்றைக் காட்டு யானை பொதுமக்கள் அலறியடித்து ஓட்டம்

வால்பாறை, டிச.19

கோவை மாவட்டம் வால்பாறை மற்றும் சுற்று வட்டார எஸ்டேட் பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக சிங்கோனா எஸ்டேட் பகுதியில் அந்த யானைகள் கூட்டமாகவும் தனியாகவும் சுற்றி திரிகிறது. அவற்றை வனத்துறையினர் அடர்ந்த வனப்பகுதிக்கு விரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இருந்தபோதிலும் அவை எஸ்டேட் பகுதியில் முகாமிட்டு குட்டிகளுடன் ரோட்டில் சுற்றி திரிந்து வருகிறது.



அதிலும் குறிப்பாக ஒற்றை காட்டுயானை கடந்த சில நாட்களாக சின்கோனா பகுதியில் சுற்றி திரிகிறது. அது இரவு நேரத்தில் பஸ்சை வழிமறிப்பதும், குடியிருப்பு பகுதியில் சுற்றித்திரிவதுமாக அட்டகாசம் செய்து வருகிறது.

இந்த நிலையில் சின்கோனா பெரியகல்லார் சாலையில் நேற்று மதியம் ஒற்றை காட்டுயானை பட்டப்பகலில் உலா வந்தது. இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த தேயிலை பறிக்கும் தொழிலாளர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். பின்னர் பாதுகாப்பான இடம் தேடி தஞ்சம் அடைந்தனர்.

இதற்கிடையே காட்டு யானை நடமாட்டம் பற்றி தகவலறிந்த வனத்துறையினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். பின்னர் ரோட்டில் பட்டப்பகலில் நடந்து சென்ற ஒற்றை காட்டு யானையை வனப்பகுதிக்குள் விரட்டினர்.

வால்பாறை சின்கோனா ரோட்டில் ஒற்றை காட்டு யானை பட்டப்பகலில் நடந்துசென்ற சம்பவம், அந்த பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

# விவேகானந்தா கல்லூரியில் நாளை 380 ஆசிரியர்களுக்கு கனவு ஆசிரியர் விருது: அமைச்சர் அன்பில் மகேஷ் தகவல்

சேலம், டிச.19

கற்பித்தலில் புதுமையை புகுத்தியும் மற்றும் தொழில் நுட்ப திறனை பயன்படுத்தி கற்பித்தலை செய்யும் ஆசிரியர்களை கண்டறிந்து அவர்களின் கல்வித்திறன் மற்றும் கற்பித்தல் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கனவு ஆசிரியர் விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில் தமிழகம் முழுவதும் இருந்து 380 ஆசிரியர்கள் இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



இந்த விருது வழங்கும் விழா நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே உள்ள இளையாம்பாளையம் விவேகானந்தா மகளிர் பொறியியல் கல்லூரி கலையரங்கில் நாளை (19ந் தேதி) காலை 9 மணிக்கு தொடங்குகிறது. இந்த விழாவில் 380 பேருக்கும் விருதுகளை பள்ளிகல்விதுறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கி விழா பேருரையாற்றுகிறார். வனத்துறை அமைச்சர் மதிவேந்தன் விழா சிறப்புரையாற்றுகிறார்.

பள்ளி கல்வி இயக்குனர் அறிவொளி வரவேற்று பேசுகிறார். பள்ளி கல்வி துறை அரசு செயலாளர் குமரகுருபரன் திட்ட விளக்க உரையாற்றுகிறார். மாவட்ட கலெக்டர் டாக்டர் உமா தலைமை உரையாற்றுகிறார். எம்.பி.க்கள் ராஜேஷ்குமார் சின்ராஜ், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகதலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, திருச்செங்கோடு தொகுதி எம்.எல்.ஏ. ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றுகிறார்கள். விழாவில் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள். தொடக்க கல்வி இயக்குனர் கண்ணப்பன் நன்றி கூறுகிறார்.

இந்த விழாவில் விருது பெறுபவர்கள் குடும்பத்துடன் கலந்து கொள்ளும் வகையில் தங்கும் இடம், உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆமை கறியை சமைக்கும் அதிவிரைவு படையினர் மாவட்ட வன அலுவலர் விசாரணை



சத்தியமங்கலம், டிச.19

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே தெங்குமரஹாடா வனப்பகுதி உள்ளது. தெங்குமரஹாடா மாயற்றை மையமாக கொண்டு பவானிசாகர் வனப்பகுதியில், நீலகிரி வனப்பகுதியும் உள்ளது.

இந்த அடர்ந்த வனப்பகுதியில் மாவோயிஸ்ட் மற்றும் நக்சலைட் நடமாட்டம் உள்ளதா என்பதை கண்காணிக்கும் வகையில் நக்சல் ஒழிப்பு பிரிவு போலீசார், அதிவிரைவு படை போலீசார் மற்றும் வனத்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த அடர்ந்த வனப்பகுதியில் யானை, புலி, சிறுத்தை, காட்டெருமை, மான், காட்டு முயல் ஆமை, முதலைகள் போன்ற வன விலங்குகள் வசித்து வருகின்றன.

அவ்வப்போது அடர்ந்த வனப்பகுதிக்குள் வேட்டையாடும் கும்பல் வந்து விலங்குகளை வேட்டையாடுவதும் தொடர்கதை ஆகி வருகிறது. இதனை தடுக்க வனத்துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று தெங்குமரஹாடா மாயாற்று அடர்ந்த வனப்பகுதியில் அதிவிரைவு படை போலீசார் சிலர் வனப்பகுதியில் இருந்து ஆமையை எடுத்து வந்து கத்தியால் ஆமையை அறுத்து சமைக்கும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலானது. இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்த வனத்துறை ஆர்வலர்கள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். சம்பவம் நடந்த பகுதி ஈரோடு மாவட்ட எல்லை வனப்பகுதியும், நீலகிரி மாவட்ட எல்லை வனப்பகுதியில் அமைந்துள்ளதால் அந்த வீடியோவில் இருக்கும் வீரர்கள் யார் என்று உடனடியாக தெரியவில்லை.

இதுகுறித்து சத்தியமங்கலம் வனத்துறை அலுவலர் சுதாகர் விசாரணை நடத்தி வருகிறார்

# பெரியாறு, வைகை அணைகளின் நீர்மட்டம் கிடுகிடு உயர்வு: 5 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

கூடலூர், டிச.19

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள தேனி மாவட்டத்தில் நேற்று மதியம் முதல் விட்டு விட்டு கனமழை பெய்து வருகிறது. நேற்று இரவு பல்வேறு இடங்களில் கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 1½ அடி உயர்ந்துள்ளது. நேற்று அணையின் நீர்மட்டம் 134.95 அடியாக இருந்தது. நீர்வரத்து 652 கன அடியாக இருந்தது. இன்று காலை அணையின் நீர்மட்டம் 136.50 அடியாக உயர்ந்துள்ளது. நீர் வரத்து 5987 கன அடியாக உள்ளது. அணையில் இருந்து 1500 கன அடி தண்ணீர்திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 6244 மி.கன அடியாக உள்ளது. அணையின் நீர்மட்டம் மீண்டும் 136 அடியை கடந்துள்ளதால் இடுக்கி மாவட்டத்திற்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது. 71 அடி உயரம் உள்ள வைகை அணையின் நீர்மட்டம் கடந்த மாதம் 9ந்தேதி முழு கொள்ளளவை எட்டியது. இதனைத் தொடர்ந்து மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. நேற்று இரவு முதல் வைகை அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 66.01 அடியை எட்டியதால் முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 19280 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து 3169 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 4854 மி.கன அடியாக உள்ளது.

அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் இன்று காலை10 மணிக்கு 25ஆயிரம் கனஅடி வரையிலும் மாலையில் மேலும் கூடுதலாக தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். இன்று 69 அடியை அணையின் நீர்மட்டம் எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதால் 3ம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் மதுரை, தேனி, திண்டு க்கல், ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் வைகைகரையோரம் உள்ள மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு ள்ளது. இது தொடர்பாக 5 மாவட்ட கலெக்டர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்தனர். பெரியகுளம் சுற்றுவட்டார பகுதிகளான தேவதானப்பட்டி, ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடுகபட்டி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால் கும்பக்கரை அருவியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. எனவே மீண்டும் அருவியில் குளிப்பதற்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

சோத்துப்பாறை அணை முழு கொள்ளளவை எட்டி அணைக்கு வரும் 128 கன அடி நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் வராகநதியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 127.42 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 629 கன அடி நீர் முழுவதும் வெளியேறி வருகிறது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டி 56.30 அடியாக உள்ளது. நீர் வரத்து மற்றும் திறப்பு 128 கன அடி. இருப்பு 432 மி.கன அடி.

தொடர் மழை காரணமாக தேனி மாவட்டத்தில் இன்று பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் வயல்களில் தண்ணீர் தேங்கி இருப்பதால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. இடைவிடாமல் பெய்து வரும் மழையினால் அன்றாட பணிகளுக்கு செல்பவர்களுக்கு மிகுந்த பாதிப்பை சந்தித்து வருகின்றனர். முக்கிய அணைகள் அனைத்தும் நிரம்பி உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் குளங்கள், கண்மாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளும் நிரம்பி வருகின்றன.

பெரியாறு 82.6, தேக்கடி 108, கூடலூர் 33.6, உத்தமபாளையம் 14.6, சண்முகாநதி அணை 88.4, போடி 87, வைகை அணை 25, மஞ்சளாறு 52, சோத்துப்பாறை 126, பெரியகுளம் 96, வீரபாண்டி 104.6, அரண்மனைபுதூர் 93, ஆண்டிபட்டி 86.6 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது.

# குமரி மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு: கால்வாய், குளங்கள் உடைப்பு மூழ்கிய நெற்பயிர்கள்

நாகர்கோவில், டிச.19

குமரி மாவட்டத்தில் கொட்டித்தீர்த்த மழையின் காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. மாவட்டம் முழுவதும் நேற்று இரவு பல்வேறு இடங்களில் பரவலாக மழை பெய்தது. மயிலாடியில் நேற்று அதிகபட்சமாக 303.2 மில்லிமீட்டர் மழை பதிவாகியுள்ளது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் மலையோர பகுதிகளிலும் மழை நீடித்து வருவதால் அணைகளுக்கு கணிசமான அளவு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.



இதையடுத்து பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளில் இருந்து 11 ஆயிரம் கன அடி உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் காரணமாக கோதையாறு, குழித்துறை, தாமிரபரணி ஆறு, வள்ளியாறு, பரளியாறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

கோதையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக திற்பரப்பு அருவியிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் அருவியில் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டு ள்ளது. பழையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்காரணமாகபல்வேறு இடங்களில் உள்ள விளைநிலங்களில் தண்ணீர் புகுந்தது. சுசீந்திரம் பகுதியில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்துள்ளது.

புத்தேரி பகுதியிலும் பழையாற்றில் உடைப்பு ஏற்பட்டு விளைநிலங்களில் தண்ணீர் புகுந்துள்ளது. மாவட்டத்தின் மேலும் சில இடங்களிலும் சானல்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் விவசாய நிலங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது.

பூதப்பாண்டி அருகே சண்முக புரம் குளம் உடைந்து தண்ணீர் வெளியேறி வருகிறது. இரவிபுதூர் ஊராட்சிக்குட்பட்ட காடாங்குளத்திலும் உடைப்பு ஏற்பட்டுள்ளது. நாகர்கோவில் நகர பகுதியிலும் குடியிருப்புகளை சூழ்ந்த தண்ணீர் இன்னும் வடியவில்லை. ஊட்டுவாழ்மடம், சக்தி கார்டன், மீனாட்சி கார்டன், ரெயில்வே குடியிருப்பு பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்து உள்ளதால் பொதுமக்கள் பரிதவிப்பிற்கு ஆளாகியுள்ளனர்.

தோவாளை அண்ணா காலனி, திருப்பதிசாரம் நெசவாளர் காலனி, சகாய நகர் பகுதியில் உள்ள குடியிருப்புகளையும் வெள்ளம் சூழ்ந்து ள்ளது. அகஸ்தீஸ்வரம், காமராஜ புரம் தென்தாமரை குளம் பகுதியிலும் சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. ஈசாந்திமங்கலம் பகுதியில் ஆரம்ப சுகாதாரநிலையத்திற்குள் தண்ணீர் புகுந்துள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்தை சுற்றி தண்ணீர் தேங்கியுள்ளதால் செவிலியர்கள், டாக்டர்கள், பொதுமக்கள் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. திருப்பதிசாரம் கோவிலுக்குள் தண்ணீர் புகுந்துள்ளது.

பேச்சிப்பாறை அணைக்கு தொடர்ந்து தண்ணீர் அதிகரித்து வருவதால் மேலும் கூடுதல் தண்ணீர் திறக்க வாய்ப்பு உள்ளது. எனவே கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று காலை 45.57 அடியாக உள்ளது. அணைக்கு 6208 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 5032 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 75.32 அடியாக உள்ளது. அணைக்கு 5642 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து 587 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சிற்றார் 1 அணை நீர்மட்டம் 16.89 அடியாக உள்ளது. அணைக்கு 732 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 534 கன அடி உபரிநீர் திறக்கப்பட்டு வருகிறது.

மாம்பழத்துறையாறு, முக்கடல் அணைகளும் முழு கொள்ளளவை எட்டி நிரம்பி வழிகின்றன. பொய்கை அணையின் நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் 5 அடி உயர்ந்துள்ளது.



வருகிற 25 ஆம் தேதி அன்று கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு 17122023 அன்று திருப்பூர் வட்டகைக்கு உட்பட்ட பிச்சம்பாளையம் புதூர் துரைசாமிபுரம் சி எஸ் ஐ பரிசுத்தர் மீட்பர் ஆலயத்தில் கிறிஸ்து நாதர் இயேசு பிறப்பின் அறிவிப்பை வெளிப்படுத்தும் விதமாக மெழுகுவர்த்தி ஆராதனையை சபை மக்கள் ஒன்று கூடி பாடல் பாடி கொண்டாடினர்

# இலவச விடுதியில் வசதிகள் இருக்காது என அநாகரீக பேச்சு: மாணவிகள் போராட்டம்




சின்னாளபட்டி, டிச.19

திண்டுக்கல்மதுரை 4 வழிச்சாலையில் காந்தி கிராமத்தை அடுத்து அம்மாபாத்துரையில் அரசு பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கான விடுதி செயல்பட்டு வருகிறது.

இங்கு காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவிகள் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள அரசு, தனியார் கல்லூரி மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர்.

கல்லூரி விடுதியில் சேர்வதற்கு எந்தவித கட்டணமும் கிடையாது என்ற போதும் மாணவிகளிடம் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை பணம் வசூலிக்கப்படுவதாக தொடர்ந்து புகார் எழுந்து வருகிறது.

இந்நிலையில் இந்த விடுதியில் மாணவிகளுக்கு எந்தவித அடிப்படைவசதிகளும் இல்லை என கூறி கொட்டும் மழையில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இது குறித்து மாணவிகள் தெரிவிக்கையில், தற்போது இங்கு 60க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்கி உள்ளோம். மாணவிகளுக்கு ரேசன் அரிசியில்தான் உணவு சமைத்து வழங்கப்படுகிறது. பல நேரங்களில் சுகாதாரமற்ற முறையில் உண்பதற்கு லாயக்கற்ற நிலையில் உள்ளது.

குடிநீர் இல்லாததால் வெளியில் இருந்து மாணவிகள் தண்ணீர் கேன்கள் விலை கொடுத்து வாங்கி வருகிறோம். கழிவறைகள் முறையாக சுத்தம் செய்யப்படுவதில்லை. நாப்கின்கள் வைக்கும் எந்திரம் சுகாதாரமான முறையில் இல்லை. இது போன்ற அடிப்படை வசதிகள் கேட்டு பல முறை புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சமையலர், தூய்மை பணியாளர்கள், காவலாளிகள் ஆகியோர் இருந்தும் அவர்களது பணியை முறையாக செய்யவில்லை. விடுதி அதிகாரிகளிடம் கேட்டால் அரசு இலவச விடுதியில் இவ்வாறுதான் இருக்கும் என்று பொறுப்பற்ற முறையில் பதில் அளிக்கின்றனர்.

எனவே எங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று போராட்டம் நடத்தி வருகிறோம் என்றனர். இதனிடையே மாணவிகள் போராட்டத்தால் விடுதியை பூட்டியதால் திடீர் பரபரப்பு ஏற்பட்டது. அதன்பின்பு தாங்கள் கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்று தெரிவித்ததை அடுத்து விடுதி திறக்கப்பட்டது. மாணவிகள் போராட்டத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த அம்பாத்துரை போலீசார் மற்றும் ஆத்தூர் தாசில்தார் வடிவேல்முருகன் ஆகியோர் பேச்சு வார்த்தை நடத்தினர். தங்களது குறைகளை மாவட்ட கலெக்டரிடம் தெரிவிக்க உள்ளதாக மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

# பழவேற்காடு கடற்கரை பகுதிகளில் தேங்கிய தார் உருண்டைகள்: எண்ணெய் கழிவு பரவி கரை ஒதுங்கியதாக மீனவர்கள் தகவல்

சென்னை, டிச.19

மிச்சாங் புயல் மழையின் போது எண்ணெய் கழிவுகள் கொசஸ்தலை ஆற்று நீரிலும், மழை வெள்ளத்திலும் கலந்ததால் எண்ணூர், மணலி திருவொற்றியூர் பகுதிகளை சேர்ந்த மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். இந்த எண்ணெய் கழிவுகள் எண்ணூரில் இருந்து 26 கி.மீ.தொலைவில் உள்ள பறவைகள் சரணாலயமான பழவேற்காடு ஏரியிலும் பரவியுள்ளன.



இதனால் பழவேற்காடு ஏரி அருகே உள்ள பல கடற்கரை கிராமங்களில் கடந்த 2 நாட்களாக தார் உருண்டைகள் கரை ஒதுங்கி வருகின்றன. கடற்கரை பகுதியில் கடல் சிப்பிகளை சேகரிக்க சென்ற பெண்கள் தார் உருண்டைகள் கரை ஒதுங்கி இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

பழவேற்காடு அருகேயுள்ள கோரைக் குப்பம், வைரவன் குப்பம், அரங்கக் குப்பம், கூனங் குப்பம், பழைய சாத்தங்குப்பம் மற்றும் பழவேற்காடு மீன் மார்க்கெட் பகுதிகளிலும் தார் உருண்டைகள் காணப்படுகின்றன. இந்த தார் உருண்டைகள் அதிக அளவில் உள்ளன. மேலும் பழவேற்காடு ஏரிப்பகுதியிலும் சில இடங்களில் எண்ணெய் கழிவுகள் மிதந்துள்ளன.

இதையடுத்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் அந்த இடங்களில் தண்ணீரை சோதனைக்காக எடுத்து சென்றுள்ளனர். மேலும் தார் உருண்டைகளையும் சோதனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அதன் முடிவு இன்று வெளியாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் அதிகாரிகளும் இந்த பகுதிகளை பார்வையிட்டு வருகிறார்கள்.

மேலும் பழவேற்காடு ஏரியில் உள்ள பறவைகள் கடந்த 10 நாட்களுக்கு முன்பே வடக்கே சுமார் 5 கி.மீ. தொலைவுக்கு சென்றுவிட்டன. மேலும் இந்த பகுதியில் சுமார் 2500க்கும் மேற்பட்ட மீன்கள் செத்து மிதந்துள்ளன.

இதுகுறித்து மீனவர் சங்கத்தினர் கூறுகையில், 'பழவேற்காடு ஏரிக்கு நீர் வருவதை கண்காணித்து எண்ணெய் பரவாமல் தடுக்க வேண்டும். கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் வரத்து குறைந்து ஏரி தூர்ந்து வருகிறது. எனவே ஏரியை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

# ராஜபாளையம் அருகே வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது: தண்ணீரில் மூழ்கி மூதாட்டி உயிரிழப்பு

ராஜபாளையம், டிச.19

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள வேலாயுதபுரம், சத்திரப்பட்டி, வாகைகுளம் பகுதிகளில் உள்ள கண்மாய்களில் தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

2வது நாளாக அடைமழை பெய்து வரும் நிலையில் கண்மாயிலிருந்து வெளியேறும் நீர் செல்ல வழி இல்லாமல் ஓடையில் நிரம்பி வழிவதால் குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் புகுந்தது.

வாகைக்குளம்பட்டி பகுதியில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்துள்ளது. வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த சங்கிலியூர் என்ற 80 வயது மூதாட்டி வீட்டில் திடீரென மழைநீர் வீட்டுக்குள் புகுந்ததால் தண்ணீருக்குள் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

மேலும் அதே பகுதியில் 2 வீடுகளும் இடிந்து சேதமடைந்தது. சேதமடைந்த வீடுகளுக்கும், மழைநீர் புகுந்து பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அப்பகுதியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தொகுதியில் வெள்ளம் பாதித்த பகுதிகளை கனிமொழி பார்வையிட்டார்

தூத்துக்குடி, டிச.19

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்கை முடங்கியுள்ளது. மேலும் கனமழை காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தூத்துக்குடியில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி நேரில் சென்று பார்வையிட்டார். சாலைகளில் நடந்து சென்றும், பேருந்தில் பயணித்தும் கனிமொழி ஆய்வு மேற்கொண்டார். அவருடன் அமைச்சர் கீதா ஜீவன் உடன் இருந்தார்.



பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்ட நிலையில் கனிமொழி தூத்துக்குடியில் நேரில் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

முன்னதாக, தூத்துக்குடி மாவட்டத்தில் பெய்துவரும் கனமழையின் காரணமாக இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை செய்துவருகிறோம். மருத்துவம், உணவு உள்ளிட்ட அவசர உதவிக்கு வாட்ஸ் ஆப் செயலி மூலம் தொடர்பு கொள்ளவும். உதவிட முன்வரும் தன்னார்வலர்களும் இதில் தங்களை இணைத்து கொள்ளலாம் என்று 80778 80779 தொடர்பு எண்ணையும் கனிமொழி அறிவித்து இருந்தார்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் கல்லூரி மாணவர் பலி

பெரியபாளையம், டிச.19

பெரியபாளையம் அருகே உள்ள திருக்கண்டலம் ஊராட்சி, மேட்டுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் அபினேஷ் (வயது20). இவர் பொன்னேரியில் உள்ள அரசு கல்லூரியில் 3ம் ஆண்டு பி.ஏ படித்து வந்தார். மேலும், தனது குடும்ப வறுமையின் காரணமாக பகுதி நேரமாக பெயிண்டிங் மற்றும் கொத்தனார் வேலைக்கும் சென்றார். இந்நிலையில் அபினேஷ், மடவிளாகம் பகுதியில் வசித்து வரும் நண்பரான முரளி(21) என்பவருடன் வேலைக்கு சென்று விட்டு நேற்று இரவு ஒரே மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பி கொண்டு இருந்தார். கன்னிகைப்பேர் மஞ்சங்காரணை நெடுஞ்சாலையில் கன்னிகைப்பேரில் உள்ள தனியார் கல்லூரி எதிரே சென்று கொண்டிருந்த போது சாலையில் உள்ள பள்ளத்தில் மோட்டார் சைக்கிள் ஏறி இறங்கியது.. இதில், கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சாலை தடுப்பில் அதிவேகத்தில் மோதியது.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்த அபினேஷ் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார். நண்பர் முரளி படுகாயம் அடைந்து உயிருக்கு போராடினார். அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு சென்னை ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து பெரியபாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# ஒருபோதும் தனிக்கட்சி தொடங்க மாட்டேன் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு

சென்னை, டிச.19

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வம் கட்சி பெயர், சின்னம் எதையும் பயன்படுத்தக் கூடாது என்று கோர்ட்டு உத்தரவிட்டது.

அடுத்த கட்டமாக கட்சியை நடத்துவது எப்படி? என்பது தொடர்பாக அவரது ஆதரவு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த திட்டமிட்டார்.

இதையொட்டி மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டம் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் சென்னை எழும்பூரில் இன்று நடந்தது.




அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு ஆலோசனை கூட்டம் என்ற பெயரில் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் வைத்திலிங்கம், ஜே.சி.டி. பிரபாகர், மனோஜ் பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ஓ.பன்னீர் செல்வம் பேசும் போது கூறியதாவது:

அ.தி.மு.க. தொண்டர்களின் உரிமை மீட்பு குழு என்பது தற்காலிக அமைப்பு தான். எந்த காலத்திலும் தனிக்கட்சி தொடங்கும் எண்ணம் இல்லை.

கோர்ட்டு தீர்ப்பு நமக்கு சாதகமாகவே வரும். விரைவில் பாராளுமன்ற தேர்தல் வர உள்ளது. தேர்தலை சந்திக்க கீழ் மட்டம் வரை நமது கட்டமைப்பு பலமாக உள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும். உண்மையான அ.தி.மு.க. தொண்டர்களின் உரிமைகளை நிச்சயம் மீட்டெடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் 4வது மாடியில் இருந்து குதித்து நோயாளி தற்கொலை

ராயபுரம், டிச.19

திருவொற்றியூர் எல்லையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சின்னா (வயது 30). திருமணமானவர். இவர் தொண்டையில் கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார்.

நோயின் தாக்கம் அதிகமாக இருந்ததால் அவருக்கு நவம்பர் 1ந் தேதி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

தொடர்ந்து சின்னா உள்நோயாளியாக தங்கி கிச்சையில் பெற்று வந்தார். எனினும் நோயினால் கடும் அவதிப்பட்ட சின்னா கடும் மன உளைச்சலில் இருந்ததாக தெரிகிறது. அவரை உறவினர்கள் சமாதானப்படுத்தி ஆறுதல் கூறிவந்தனர்.

இந்நிலையில் சின்னா ஸ்டான்லி ஆஸ்பத்திரியின் 4வது மாடியில் இருந்து திடீரென கீழே குதித்தார். இதில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

இதனை கண்டு ஆஸ்பத்தரியில் இருந்த நோயாளிகள் அதிர்ச்சி அடைந்தனர். அவரது உடலை போலீசார் மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும்இது தொடர்பாக வண்ணாரப்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகத்தின் சார்பில் உதவிக்கரம் நீட்டுவோம்: இபிஎஸ்

சென்னை, டிச.19

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு விரைந்து உணவுப் பொருட்கள், மருத்துவ உதவி போன்ற நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் மக்களுக்கு வழங்கிட இந்த விடியா திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

கனமழை தொடர்ந்து பெய்து வருவதால், சென்னையில் ஏற்பட்டது போல் கவனக்குறைவுடன் மக்களை பாதிக்கப்படவிடாமல், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், காவல் பணி அதிகாரிகள் ஆகியோரின் அனுபவங்களைப் பயன்படுத்தி, சீர்குலைந்த சாலைகள், தகவல் தொடர்புகள் மற்றும் நிவாரணப் பணிகளை திட்டமிட்டு துரிதமாக செயல்படுத்த வேண்டும் என்று இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

மேலும், கனமழையில் பொதுமக்கள் கவனத்துடன் பாதுகாப்பாக எச்சரிக்கையுடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்வதுடன், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரண உதவிகளை வழங்கிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# வைகையில் வெள்ளம்: பொதுமக்களுக்கு தடை

மதுரை, டிச.19

மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் நேற்று முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. மதுரை மாவட்டம் முழுவதும் நேற்று இரவு முதல் இன்று அதிகாலை வரை விடிய விடிய மிதமான மழை பெய்தது. இதனால் முக்கிய சாலைகள் மற்றும் பஸ் நிலைய பகுதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடின. மதுரை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக கண்மாய்கள், குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் நீர்நிலைகள் நிரம்பும் நிலையில் இருந்து வருகிறது.

இந்த நிலையில் மதுரையின் பல்வேறு இடங்களில் மழை காரணமாக சாலைகளில் தண்ணீர் தேங்கியதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டன. மதுரை நகரை பொறுத்தவரை கோரிப்பாளையம், சிம்மக்கல், பெரியார் பஸ் நிலையம், ரெயில் நிலையம் பகுதிகளில் மழை நீர் தேங்கியதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்தனர். பரவலான மழை காரணமாக மதுரை வைகை ஆற்றில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளது. இதனால் இரு கரைகளையும் தொட்டபடி தண்ணீர் ஆர்ப்பரித்து ஓடுகிறது.

வைகை கரையோர சர்வீஸ் சாலையிலும் கல்பாலம் அருகே தண்ணீர் தேங்கியுள்ளது. நீர்வரத்து அதிகப்பு காரணமாக மதுரை வைகை ஆற்றில் இறங்கவும், கால்நடைகளை குளிப்பாட்டவும் தடை விதிக்கப்பட்டு ள்ளது. ஆற்றுக்குள் செல்லும் பாதைகள் அடைக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்டத்திலும் பரவலாககனமழைபெய்து வருவதால் வைகை அணைக்கு சுமார் 20000 கன அடி தண்ணீர் வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 66 அடியை எட்டியுள்ளது. மொத்த கொள்ளளவான 71 அடியை விரைவில் எட்டும் என்பதால் வைகை கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

எந்தநேரத்திலும்வைகை அணையில் இருந்து ஆற்றில் கூடுதலாக தண்ணீர் திறக்கப்படும் என்பதால் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வைகை கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளனர்.

கனமழை காரணமாக இன்று விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்ட நிலையில் மதுரையில் மிதமான மழை பெய்ததால் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்படுமா? என்ற எதிர்பார்ப்பு இருந்த நிலையில் மதுரையில் வழக்கம் போல பள்ளி, கல்லூரிகள் இயங்கும் என்று மாவட்ட கலெக்டர் அறிவித்தார்.

இதனால் காலை நேரத்தில் மழை பெய்த போதும் பள்ளி கல்லூரிகளுக்கு மாணவ மாணவிகள் நனைந்தபடியே சென்றனர். இருசக்கர வாகனங்கள், ஆட்டோக்களில் அதிக அளவில் மாணவர்கள் பயணம் செய்ததால் முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டது.

மதுரையில் மழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரி செய்ய மாநகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தண்ணீர் தேங்கியுள்ள தாழ்வான பகுதிகளில் மழை நீரை வெளியேற்ற தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. தத்தனேரி, கருடர் பாலம் பகுதியில் உள்ள சுரங்க பாதைகளில் மழை நீர் தேங்காத வகையில் அதனை உடனுக்குடன் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# அ.ம.மு.க. சார்பில் 23ந்தேதி டி.டி.வி.தினகரன் தலைமையில் கிறிஸ்துமஸ் விழா

சென்னை, டிச.19

அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

உலகெங்கும் அன்பை போதித்து அன்பே பிரதானம் என்றுரைத்த இறைமகனாம் அருள்நாதர் இயேசு கிறிஸ்து அவதரித்த கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சென்னை செயின்ட் தாமஸ் மவுண்ட் நார்த்பரேட் மாண்ட்போர்டு பள்ளி வளாகத்தில் வருகிற 23ந்தேதி (சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு ஐக்கிய கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்படுகிறது. இந்த கிறிஸ்துமஸ் பெருவிழாவில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடியை சந்திக்க நேரம் கோரியுள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச.19

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மிச்சாங் புயல் மற்றும் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்கவும், தற்போது தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எடுத்துக் கூறி ஆலோசிக்கவும், நாளை (19.12.2023) புதுடெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க நேரம் கோரி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, இந்தியா கூட்டணியின் ஆலோசனைகூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லி புறப்பட்டு செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 19.12.2023




# என்னையும் கிண்டல் செய்துள்ளார்கள் எம்.எஸ். பாஸ்கர்

ஜி.எஸ். சினிமா இன்டர்நேஷனல் சார்பில் லெனின் பாபு தயாரிப்பில் அறிமுக இயக்குநர் மந்திர வீரபாண்டியன் இயக்கத்தில், இவானா, வெங்கட் செங்குட்டுவன் நடிப்பில் திரில்லர் டிராமாவாக உருவாகியுள்ள திரைப்படம் "மதிமாறன்". இந்த படத்திற்கான பணிகள் நிறைவடைந்து, ரிலீசுக்கு தயாராகி இருக்கிறது.

இந்த நிலையில் இந்த படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. இது தொடர்பான விழாவில் கலந்து கொண்டு பேசிய எம். எஸ். பாஸ்கர், "இது ஒரு நல்ல கதை. நல்ல கேரக்டர். படத்தில் அனைத்து கேரக்டர்களுமே அருமையான பாத்திரங்கள். எனக்கு மந்திரா கதை சொன்னபோதே மிகவும் பிடித்திருந்தது."

"உணர்வுப்பூர்வமாக நிறைய இடத்தில் டயலாக் பேசினேன். என்னை மிகவும் கலங்க வைத்தது இந்தப்படம். ஹீரோ வெங்கட் செங்குட்டுவன் அவ்வளவு அற்புதமாக நடித்துள்ளார். உயரத்தில் என்ன இருக்கிறது. எனக்கே முடி கொட்டிய பிறகு தான் வாய்ப்புகள் வந்தது. என்னையும் கிண்டல் செய்துள்ளார்கள். உலகில் சாதனை படைத்த பலர் உருவத்தில் குறைவாக இருந்தவர்கள் தான். அதற்காகக் கவலையே படக்கூடாது." "இவனா என் மகளாக நடித்திருக்கிறார். என் மகள் தான் நன்றாக நடித்துள்ளார். இப்படி ஒரு அற்புதமான படத்தில் நானும் நடித்திருப்பது மகிழ்ச்சி. இந்தப்படம் மிகப்பெரிய வெற்றி அடைய வேண்டும்," என்று தெரிவித்தார். இப்படத்தில் இவானா முதன்மை பாத்திரத்தில் நடிக்க வெங்கட் செங்குட்டுவன் நாயகனாக நடித்துள்ளார். இவர்களுடன் ஆராத்யா, எம். எஸ்.பாஸ்கர், நரேன், பாவா செல்லதுரை, E.பிரவீன் குமார், சுதர்சன் கோவிந்த் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

# மூன்று நாட்களில் இத்தனை கோடிகளா? வசூலில் வரவேற்பை பெறும் பைட் கிளப்



அப்பாஸ் ஏ ரஹ்மத் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'பைட் கிளப்' (Fight Club). இந்த படத்தில் 'உறியடி' விஜய்குமார் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், கார்த்திகேயன், சந்தானம், ஷங்கர் தாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ரீல்ஸ் குட் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த படத்திற்கு கோவிந்த் வசந்தா இசையமைத்துள்ளார். இந்த படத்தை இயக்குனர் லோகேஷ் கனகராஜ் 'ஜி ஸ்குவாட்' தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். கடந்த வெள்ளி கிழமை (டிசம்பர் 15) வெளியான பைட் கிளப் படம் விமர்சன ரீதியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில், பைட் கிளப் படம் வெளியான மூன்று நாட்களில் ரூ. 5 கோடியே 25 லட்சத்திற்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக இந்த படத்தை பார்த்த திரை பிரபலங்கள் பலரும் படத்தை வெகுவாக பாராட்டி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஷாருக்கானின் 'டங்கி' படத்திற்கான முன்பதிவு தொடங்கியது

ராஜ்குமார் ஹிரானியின் 'டங்கி' திரைப்படத்தின் வெளியீடு நெருங்கி வரும் தருணத்தில் இப்படத்தை காண்பதற்கான ரசிகர்களின் உற்சாகத்தில் உள்ளனர்.

இந்த படத்தில் ஷாருக்கானுடன் பொமன் இரானி, டாப்ஸி பண்ணு, விக்கி கௌஷல், விக்ரம் கோச்சார், அனில் குரோவர். உள்ளிட்ட திறமையான நடிகர்கள் அவர்களுக்கென பிரத்யேக கதாபாத்திரங்களுடன் 'டங்கி'யில் நடித்துள்ளனர் உலகம் முழுவதும் இந்த படத்தை காண முன்பதிவு தொடங்கியுள்ளது. அட்வான்ஸ் புக்கிங் மூலம் முன்பதிவு விரைவாக நிறைந்து வருகிறது.

'டங்கி' படத்தின் முன்பதிவுகள் வெளிநாடுகளில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு சாதனை படைத்து வருகிறது. இப்படத்தை ஜியோ ஸ்டுடியோஸ், ரெட் சில்லீஸ் என்டர்டெய்ன்மெண்ட் மற்றும் ராஜ்குமார் ஹிரானி பிலிம்ஸ் ஆகிய பட நிறுவனங்கள் சார்பில் ராஜ்குமார் ஹிரானி மற்றும் கௌரி கான் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள். இப்படத்திற்கு அபிஜித் ஜோஷி, ராஜ்குமார் ஹிரானி மற்றும் கனில் தில்லான் ஆகியோர் கதை எழுதி இருக்கிறார்கள். இந்த திரைப்படம் டிசம்பர் 21 ஆம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

# வசந்த் ரவி நடிப்பில் வெளியான "இந்திரா" ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு



ஜெ.எஸ்.எம். பிக்சர்ஸ் மற்றும் எம்பரர் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் வசந்த் ரவி நடிப்பில் உருவாகி இருக்கும் படத்திற்கு இந்திரா என தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.

ஜெ.எஸ்.எம். பிக்சர்ஸ் சார்பில் ஏ.ஆர்.ஜாபர் சாதிக் மற்றும் எம்பரர் என்டர்டெயின்மென்ட் சார்பில் இர்ஃபான் மாலிக்கும் இணைந்து தயாரித்து வசந்த ரவி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படத்திற்கு "இந்திரா" என்று பெயரிட்டுள்ளனர்.

நயன்தாரா நடிப்பில் வெளியான ஐரா, மெட்ராஸ் டாக்கீஸ் தயாரிப்பில் உருவாகி பெரும் வரவேற்பை பெற்ற நவரசா போன்ற படங்களில் பணியாற்றிய சபரீஷ் நந்தா, தற்போது இயக்குனராக அறிமுகமாகிறார். வசந்த் ரவி கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் இவருக்கு ஜோடியாக மெஹ்ரின் பிரசன்டா நடிக்கிறார்.

மேலும் இவர்களுடன் அனிகா சுரேந்திரன், சுனில், கல்யாண் மாஸ்டர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். தற்போது இப்படத்திற்கு இந்திரா என தலைப்பு வைக்கப்பட்டு பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

# டிமான்டி காலனி 2 புதுசா இருக்கும்.. நாங்களே பயந்துட்டோம்.. இசையமைப்பாளர் சாம் சி.எஸ்.





ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'லால் சலாம்'. கிரிக்கெட்டை மையமாக வைத்து உருவாகி இருக்கும் இந்த திரைப்படத்தில் விக்ராந்த், விஷ்ணு விஷால் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மேலும், நடிகர் ரஜினிகாந்த், முன்னாள் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் ஆகியோர் இதில் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளனர். இதில் ரஜினி மொய்தீன் பாய் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த நிலையில், லால் சலாம் படத்தின் "தேர் திருவிழா" என்ற தலைப்பு கொண்ட முதல் பாடலை படக்குழு வெளியிட்டு உள்ளது. லால் சலாம் படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள நிலையில், தேர் திருவிழா பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த படம் அடுத்த ஆண்டு பொங்கல் தினத்தில் வெளியாக இருக்கிறது.

# லால் சலாம் படத்தின் தேர் திருவிழா பாடல் வெளியானது: சமூக வலைதளங்களில் வைரல்...

ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இயக்கத்தில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'லால் சலாம்'. கிரிக்கெட்டை மையமாக வைத்து உருவாகி இருக்கும் இந்த திரைப்படத்தில் விக்ராந்த், விஷ்ணு விஷால் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மேலும், நடிகர் ரஜினிகாந்த், முன்னாள் கிரிக்கெட் வீரர் கபில்தேவ் ஆகியோர் இதில் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளனர். இதில் ரஜினி மொய்தீன் பாய் என்ற கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்தை லைகா நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த நிலையில், லால் சலாம் படத்தின் "தேர் திருவிழா" என்ற தலைப்பு கொண்ட முதல் பாடலை படக்குழு வெளியிட்டு உள்ளது. லால் சலாம் படத்திற்கு ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள நிலையில், தேர் திருவிழா பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த படம் அடுத்த ஆண்டு பொங்கல் தினத்தில் வெளியாக இருக்கிறது.

# பாகிஸ்தானால் ஆஸ்திரேலிய மண்ணில் ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியும் முகமது ஹபீஸ்




இந்தியாவில் 17வது ஐபிஎல் தொடர் வரும் 2024ம் ஆண்டு நடக்க இருக்கிறது. ஐபிஎல் 2024 தொடருக்கான மினி ஏலமானது துபாயில் வரும் 19ம் தேதி நடக்க இருக்கிறது. இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மும்பை அணியின் கேப்டனாக ஹார்திக் பாண்ட்யா நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து மும்பை அணி ரசிகர்கள் சமூக வலைதளங்களில் எதிர்ப்புகளை தெரிவித்து வந்தனர். மேலும் ரோகித் சர்மாவுக்காக மட்டுமே மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆதரவளித்து வருவதாகவும் பதிவிட்டு வந்தனர். இது மட்டுமல்லாமல் மும்பை இந்தியன்ஸ் அணியின் இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் பக்கத்தில் நேற்று வரை 1.5 லட்சம் பாலோயர்ஸ்களை மும்பை இந்தியன்ஸ் அணி இழந்தது. இந்நிலையில் இன்று வரை 4 லட்சம் பாலோயர்ஸ்களை மும்பை இந்தியன்ஸ் அணி இழந்துள்ளது. மேலும் RIP Mumbai Indians என்ற ஹேஸ்டேக் சமூக வலைதளங்களில் ட்ரெண்டாகி வருகிறது.

# அறிமுக போட்டியிலேயே அரைசதம்: சாய் சுதர்சன் பெருமிதம்



இந்தியா தென்ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையில் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி நேற்று ஜோகன்னஸ்பர்க்கில் நடைபெற்றது. முதலில் விளையாடிய தென்ஆப்பிரிக்கா 116 ரன்னில் சுருண்டது. பின்னர் இந்தியா 2 விக்கெட் இழப்பிற்கு 117 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் தமிழகத்தின் இளம் வீரரான சாய் சுதர்சன் அறிமுகம் ஆனார். மூன்று விடிவிலான கிரிக்கெட்டின் ஒட்டுமொத்தமாக இந்த போட்டியில்தான் இந்திய அணிக்காக அறிமுகம் ஆகியுள்ளார். அறிமுகம் ஆன முதல் போட்டியிலேயே 43 பந்தில் 9 பவுண்டரியுடன் 55 ரன்கள் விளாசி அசத்தினார்.

அறிமுக போட்டியிலேயே இந்திய அணிக்கு சிறப்பான பங்களிப்பை கொடுத்துள்ளார். ஷ்ரேயாஸ் அய்யருடன் இணைந்து 2வது விக்கெட்டுக்கு 88 ரன்கள் சேர்த்தார். இந்த நிலையில் இந்திய அணியில் விளையாடியதன் மூலம் கனவு நனவாகியதாக சாய் சுதர்சன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

எல்லோரையும் போல் சிறுவயதில் இருந்து வளரும்போதே இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்ற கனவு எனக்கும் இருந்தது. கடின முயற்சியின் மூலம் கனவுகள் நனவாகும்.

இந்திய அணிக்காக விளையாடி, எனது பங்களிப்பை செய்தது பாக்கியம். இந்த நினைவுகளை மேலும் நீட்டித்துக் கொண்டு செல்ல பார்க்கிறேன். கே.எல். ராகுலிடம் இருந்து அறிமுகத்திற்கான இந்திய அணியின் தொப்பியை வாங்கியது சிறப்பு தருணம். ஷ்ரேயாஸ் அய்யருடன் இணைந்து விளையாடியது அமேசிங். இவ்வாறு சாய் சுதர்சன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு பிரீமியர் லீக்கில் சிறப்பாக விளையாடியதன் மூலம் ஐபிஎல் ஏலத்தில் குஜராத் அணி இவரை ஏலம் எடுத்தது. குஜராத் அணிக்காக கடந்த சீசனில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

# பாகிஸ்தானுக்கு எதிரான பாக்சிங் டெஸ்ட்: ஆஸ்திரேலிய அணி அறிவிப்பு



பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. பெர்த் நகரில் கடந்த 14ந்தேதி முதல் டெஸ்ட் தொடங்கி நடைபெற்றது. இந்த போட்டியில் ஆஸ்திரேலியா 360 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

2வது டெஸ்ட் மெல்போர்ன் நகரில் பாக்சிங் டெஸ்டாக டிசம்பர் 26ந்தேதி முதல் டிசம்பர் 30ந்தேதி வரை நடைபெற இருக்கிறது. இந்த போட்டிக்கான 13 பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணியில் இடம் பிடித்துள்ள வீரர்கள் விவரம்:

1. கம்மின்ஸ், 2. ஸ்காட் போலந்து, 3. அலெக்ஸ் கேரி (விக்கெட் கீப்பர்), 4. ஹேசில்வுட், 5. டிராவிஸ் ஹெட், 6. உஸ்மான் கவாஜா, 7. லபுசேன், 8. நாதன் லயன், 9. மிட்செல் மார்ஷ், 10. ஸ்டீவ் சுமித், 11. மிட்செல் ஸ்டார்க், 12. டேவிட் வார்னர், 13. கேமரூன் க்ரீன்.

மெல்போர்ன் மைதானத்தில் சுமார் 80 ஆயிரம் பேர் அமர்ந்து போட்டியை நேரில் கண்டு ரசிக்க முடியும். கிறிஸ்துமஸ் தினத்திற்கு அடுத்த நாளான 26ந்தேதி மைதானம் ரசிகர்களால் முழுமையான நிறைந்திருக்கும்.


# ஐபிஎல் ஏலத்தை தொகுத்து வழங்குகிறார் மல்லிகா சாகர்

உலகின் மிகப்பெரிய டி20 கிரிக்கெட் லீக் தொடராக பிசிசிஐயின் ஐபிஎல் தொடர் பார்க்கப்படுகிறது. இந்த ஐபிஎல் தொடரில் அணிகள் பங்கேற்று விளையாடுகின்றனர். 2024 சீசனில் விளையாட தேவையான வீரர்களை எடுப்பதற்கான ஏலம் நாளை துபாயில் நடைபெற உள்ளது. இதில் 10 அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்கள் கையிருப்பில் இருக்கும் பணத்திற்கு ஏற்ப வீரர்களை ஏலம் எடுப்பார்கள். ஏலம் விடும் நபர் (தொகுப்பாளர்) இதில் முக்கிய பங்கு வகிப்பார்கள். தன்னுடைய அசாத்திய திறமையால் வீரர்களின் ஏலத்தை சில சமயம் அதிகரிக்கக் கூட செய்வர். கடந்த அண்டு ஹக் எட்மேட்ஸ் ஏலத்தை தொகுத்து வழங்கினார். ஆனால் இந்த முறை மல்லிகா சாகர் தொகுத்து வழங்குவார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. பெண்களுக்கான பிரிமீயர் லீக் ஏலத்தையும் இவர்தான் தொகுத்து வழங்கினார். ப்ரோ கபடி லீக்கிற்கான ஏலத்தையும் இவர்தான் தொகுதி வஙழகினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏலத்தில் 333 பேர் வீரர்கள் பெயர் இடம் பிடித்துள்ளது. இதில் 77 வீரர்கள் ஏலம் எடுக்கப்பட இருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவின் பேட் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டார்க், டிராவிஸ் ஹெட் நியூசிலாந்தின் ரச்சின் ஜடேஜா ஆகியோர் முக்கியமான வெளிநாட்டு வீரர்களாக பார்க்கப்படுகிறார்கள்.

# துபாயில் இன்று ஐ.பி.எல். ஏலம் அதிக விலைக்கு போவது யார்?

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி 2008ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இதுவரை 16 சீசன்கள் முடிந்துள்ளது. 17வது ஐ.பி.எல். போட்டி அடுத்த ஆண்டு மார்ச் 23ந்தேதி முதல் மே 29ந்தேதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு அணியும் தங்களது விடுவிக்கப்பட்ட வீரர்கள் விவரத்தை ஏற்கனவே அறிவித்துவிட்டன.

இதேபோல டிரேடிங் முறையில் வீரர்களை அணிகள் தங்களுக்குள் மாற்றிக் கொண்டனர். குஜராத் டைட்டன்சை சேர்ந்த ஹர்திக் பாண்ட்யா மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மாற்றப்பட்டார். அவர் மும்பை அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்டு உள்ளார். ஐ.பி.எல். போட்டிக்கான மினி வீரர்கள் ஏலம் துபாயில் நாளை (19ந்தேதி) நடக்கிறது. இந்திய நேரப்படி மதியம் 1 மணிக்கு ஐ.பி.எல். ஏலம் தொடங்குகிறது. ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்களில் இது நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது. ஐ.பி.எல். ஏலப் பட்டிய லில் மொத்தம் 333 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இதில் 214 பேர் இந்தியர்கள். 119 வீரர்கள் வெளிநாட்டை சேர்ந்தவர்கள். அசோசியேட் நாடுகளில் இருந்து 2 வீரர்கள் இதில் இடம் பெற்றுள்ளனர். மொத்தம் 77 வீரர்கள் ஏலம் எடுக்கப்படுவார்கள். இதில் 30 பேர் வெளிநாட்டவர்களுக்கான இடமாகும். 10 அணிகளும் 77 வீரர்களை தேர்வு செய்வதற்காக மொத்தம் ரூ.262.95 கோடியை கைவசம் வைத்துள்ளன. பேட்ஸ்மேன்கள், ஆல்ரவுண்டர்கள், பவுலர்கள், விக்கெட் கீப்பர் என பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு வீரர்கள் ஏலம் விடப்படுகிறார்கள். 23 வீரர்களுக்கு அடிப்படை விலையாக ரூ.2 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 13 வீரர்களுக்கு அடிப்படை விலை ரூ.1½ கோடியாகும். ஐ.பி.எல். ஏலத்தில் அதிக விலைக்கு போகப் போகும் வீரர் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்டார்க், கம்மின்ஸ் (ஆஸ்திரேலியா), ரச்சின் ரவீந்திரா (நியூசிலாந்து), கோயட்சி (தென்ஆப்பிரிக்கா), ஹசரங்கா (இலங்கை). ஹர்ஷல் படேல், ஷாருக்கான் (இந்தியா) ஆகியோர் மீது இந்த ஏலத்தில் அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.



**நெடுங்கடலும்தன்நீர்மைகுன்றும்தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்**

**விளக்கம்:**
**மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலேயே பெய்யாமல் விடுமானால், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும்**

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.